இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 05-11-2024

# இஸ்ரேல் நிறுத்திக் கொள்ள வேண்டும்!

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் கொத்தாக மனித உயிர்கள் கொல்லப்படுவது தொடர்ந்து கொண்டே இருப்பது துயரமானது. கடந்த ஓராண்டாக போர் விடாமல் தொடர்ந்து வருகிறது. அந்தப் போரைத் தடுக்கும் செயலை உலகநாடுகள் அக்கறையுடன் செய்வதாகத் தெரியவில்லை. ‘அவுங்களைத் திருத்த முடியாது’ என்று அனைத்து நாடுகளும் கருதுவதாகவே நினைக்கத் தோன்றுகிறது.

**காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்தைத் தாண்டி உள்ளது. கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்று வரும் தாக்குதலில் இத்தனை ஆயிரம் பேர் உயிரிழந்ததாகவும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்ததாகவும் காசா சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் 17 ஆயிரம் பேர் குழந்தைகள். 11 ஆயிரம் பேர் பெண்கள். 26 ஆயிரம் குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளார்கள்.**

**175 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 125 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அனைத்து பல்கலைக் கழகங்களும் சிதைந்துள்ளன. மசூதிகளும் தேவாலயங்களும் சிதைந்துள்ளன. வாழும் இடங்களில் வாழ முடியாமல் இடம்பெயர்ந்துள்ளார்கள் மக்கள்.** காசாவில் இடிந்துபோன வீடுகளைக் கட்டுவதற்கே 40 ஆண்டுகள் ஆகலாம் என்று அந்நாட்டு பத்திரிக்கைகள் எழுதுகின்றன. காசாவின் அனைத்துக் கட்டமைப்புகளின் கால் பங்கு அழிக்கப்பட்டதாக ஐ.நா. அறிக்கை சொல்கிறது. 66 விழுக்காடு வீடுகள் இடிந்து போய் விட்டன. அங்கிருக்கும் அனைத்து மக்களும் வறுமையில் இருக்கிறார்கள் என்று சொல்கிறது ஐ.நா. அறிக்கை. கடந்த 15 ஆண்டுகளாக மெல்ல மெல்ல ஏற்றம் கண்டு வந்த காசாவின் பெரும்பகுதி ஓராண்டு காலத்துக்குள் அழிக்கப்பட்டு விட்டது. இந்த சோகங்கள் அனைத்தும் உலகநாடுகளால் உணரப்பட்டதாகத் தெரியவில்லை.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு வாதத்துக்கு எதிராக பாலஸ்தீனம் போராடி வருகிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கையானது, இரு நாட்டுப் போர் என்பதைத் தாண்டி குறிப்பிட்ட பிரதேசத்தில் நடக்கும் யுத்தமாக மாறி வருகிறது. காசா, லெபனான் ஆகிய நாடுகளின் மீது போர் தொடுத்து வருகிறது இஸ்ரேல். எனவே அதனை இரு நாட்டுச் சண்டையாகக் கருதி ஒதுக்கவோ, கண்டும் காணாமல் இருக்கவோ முடியாது.

ஈரான் ஆதரவு பெற்ற ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதியன்று தாக்குதல் நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் போர் நடைபெற்று வருகிறது. ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக ஈரான் ஆதரவு பெற்ற லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினரும் இஸ்ரேல் ராணுவ நிலைகளின் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே இரண்டு படுகொலைகள் நடந்துள்ளன. ஈரான் வந்திருந்த ஹிஸ்புல்லா தலைவர் இஸ்மாயில் ஹனீயேவை, இஸ்ரேல் உளவுப்பிரிவு கடந்த ஜீலை 31 ஆம் தேதி கொலை செய்துள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹஸன் நஸ்ரல் லெபனானில் வைத்து கடந்த அக்டோபர் மாதம் 27 ஆம் தேதி கொலை செய்யப்பட்டார். இதற்கும் இஸ்ரேல் பின்னணி உள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஈரான் மீது வான்வெளி தாக்குதலை நடத்தி ஈரான் வீரர்கள் நால்வரைக் கொலை செய்துள்ளது இஸ்ரேல். இதனால் கோபம் கொண்ட ஈரான், கடந்த 1 ஆம் தேதியன்று இஸ்ரேல் ராணுவ நிலைகளைக் குறி வைத்து தாக்குதலைத் தொடங்கியது. அதிநவீன ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருகிறது ஈரான்.

“எங்களின் ராணுவ நிலைகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்திய இஸ்ரேலுக்கு மிகக் கடுமையான பதிலடி தரப்படும்” என்று ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா கமேனி சொல்லி இருக்கிறார். அந்த நாட்டின் அதிக ஆட்சியதிகாரம் படைத்தவர் அவர்தான். **“ஈரான் தேசத்தின் மீதும், ஆக்கிரமிப்புக்கு எதிரான ஈரான் ஆதரவு போராளிகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தும் நாடுகளுக்கு கடுமையான பதிலடி தரப்படும். இது யூத ஆக்கிரமிப்புவாத அரசுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் பொருந்தும்”** என்றும் அவர் சொல்லி இருக்கிறார். இது எங்கு போய் முடியுமோ எனத் தெரியவில்லை.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சில நாட்களுக்கு முன்னதாக அரபு நாடுகளுக்கு ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார். இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பேசிய அவர், மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த விரும்புவதாகவும், அரபு நாடுகளுடன் இணைந்து சமாதானமாகப் போக விரும்புவதாகவும் சொல்லி இருக்கிறார். **“இங்குள்ள அரபு நாடுகளுடன் சமாதானம் அடைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆபிரகாம் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு இருந்தேன். அந்த செயல்முறையை மீண்டும் தொடர விரும்புகிறேன்” என்று சொல்லி இருக்கிறார். இது உண்மையாகச் சொன்னதாக இருந்தால் செயலில் காட்ட வேண்டியது அவர்தானே தவிர வேறு யாருமல்ல.**

**காசாவிலும் லெபனானிலும் பதற்றம் குறைக்கப்பட வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும். இஸ்ரேலுக்குச் செய்யும் உதவிகளை மற்ற நாடுகள் நிறுத்த வேண்டும். இதனை ராஜதந்திரமாக அல்ல, அசிங்கமாகப் பார்க்க வேண்டும்.**

**அனைத்துக்கும் மேலாக மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டு அதிபர்களின் ஈகோவை விட மக்களின் உயிரே முக்கியம். ‘எந்த இன மக்கள்’ என்பதில் வேறுபாடு இல்லை. எல்லா உயிரும் ஒன்று என்று எண்ணிச் செயல்பட வேண்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.11.2024) கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இணைந்து 2.85 கோடி ரூபாய் செலவில் பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் “Co-working Space” மற்றும் மாணவர்களுக்கான “கல்வி மையம்” என அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ‘முதல்வர் படைப்பகத்தை’ திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னையிலேயே முதல் முறையாக

# கொளத்தூரில் ரூ.3.66 கோடி செலவில் ‘முதல்வர் படைப்பகம்!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து நலஉதவிகள் வழங்கினார்!

**சென்னை, நவ. 5 -**

**கொளத்தூரில் ரூ.3.66 கோடி செலவில் முதல்வர் படைப்பகம் மற்றும் 3 பல்நோக்கு மையக் கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.3.81 கோடி மதிப்பீட்டில் 77 மின்மாற்றி தடுப்புகள், மகளிர் உடற்பயிற்சிக் கூடம், நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, 1.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளம் சீரமைக்கப்படும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்து, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களையும், கலைஞர் இலவச கண் மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்றவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.11.2024) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 2.85 கோடி ரூபாய் செலவில் ‘முதல்வர் படைப்பகம்’, 80.90 இலட்சம் ரூபாய் செலவில் 3 பல்நோக்கு மையக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 77 மின்மாற்றி தடுப்புகள் அமைக்கும் பணி, 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் உடற்பயிற்சி கூடம், 38.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நூலகக் கட்டடம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், ஜி.கே.எம். காலனியில் 1.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளம் சீரமைக்கப்படும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்து, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த 107 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், 350 மகளிருக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களையும், கலைஞர் இலவச கண் மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்ற 2493 நபர்களுக்கு மூக்கு கண்ணாடிகளையும் வழங்கினார்.

**முதல்வர் படைப்பகத்தை திறந்து வைத்தல்!**

சென்னை, கொளத்தூர், அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இணைந்து 2.85 கோடி ரூபாய் செலவில் பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் “Coworking Space” மற்றும் மாணவர்களுக்கான “கல்வி மையம்” என அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ‘முதல்வர் படைப்பகத்தை’ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதல்வர் படைப்பகத்தில் UPSC, TNPSC போன்ற பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள், இங்கு வந்து படித்து பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தேவையான அனைத்து போட்டித் தேர்வுக்கான புத்தகங்களும் இடம் பெற்றுள்ளன. மேலும், மாணவர்கள் எந்த இடையூறுமின்றி படிக்கும் வகையில் அமைதியான சூழலும், நீண்ட நேரம் படிப்பதற்கு உகந்த இருக்கைகள், கணினி மற்றும் இணையதள வசதியும் செய்து தரப்பட்டுள்ளன. இங்கு ஒரே நேரத்தில் 51 நபர்கள் அமர்ந்து படிக்கும் வகையில் இவ்விடம் அமையப் பெற்றுள்ளது.

அத்துடன், போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் தொழில் தொடங்கிட இயலாத பெண்களுக்கும். ஆண்களுக்கும் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக கோ ஒர்க்கிங் ஸ்பேஸ் எனப்படும் பணி செய்வதற்காக ஒரு தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் 38 நபர்கள் முறையாக அமர்ந்து பணி செய்வதற்கான நல்ல சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி 3 கலந்தாய்வு கூடங்களும், அதில் இரண்டு கூடத்தில் தலா 4 நபர்களும், ஒரு கூடத்தில் 6 நபர்களும் அமர்ந்து கலந்தாலோசனை மேற்கொள்ளும் வகையிலும், உணவு அருந்தி இளைப்பாறுவதற்காக ஒரு தளமும், என மொத்தம் மூன்று தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையிலேயே முதல் முறையாக கொளத்தூரில் தமிழ்நாடு அரசின் சார்பில் இத்தகைய சிறப்பு வாய்ந்த “முதல்வர் படைப்பகம்” உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மின்மாற்றி தடுப்பு அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்!**

கொளத்தூர், கந்தசாமி சாலை வெங்கடேசன் சாலை சந்திப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 64 முதல் 70 வரை உள்ள வார்டுகளில் பல்வேறு இடங்களில் மின்மாற்றிகளுக்கு நமக்கு நாமே திட்டத்தின் மூலம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 77 மின்மாற்றி தடுப்பு (View Cutter) அமைக்கும் பணிக்கு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**3 பல்நோக்கு மையக் கட்டடங்களை திறந்து வைத்து, மகளிர் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்!**

ஜி.கே.எம். காலனியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், வார்டு 64ல் முகமது உசேன் காலனி 5வது குறுக்கு தெருவில் 22 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒரு பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ஜி.கே.எம். காலனி 24வது “A” தெருவில் 58 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 பல்நோக்கு மையக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். பின்னர், பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாய விலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களையும், புதிய குடும்ப அட்டைகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ஜவஹர் நகர் 2வது வட்ட சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலில் 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு உள்கட்டமைப்புகளுடன் கட்டப்படவுள்ள பெண்களுக்கான உள்ளரங்க உடற்பயிற்சிக் கூடம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.கிரிராஜன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வசந்தா தோட்டம் பகுதியில் 38 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நூலகக் கட்டடம், என மொத்தம் 81 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலான கட்டடங்களுக்கு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**ஜி.கே.எம். காலனியில் குளத்தினை மேம்படுத்தும் பணியினையும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய உந்து நிலையத்தின் செயல்பாட்டினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தல்!**

அதனைத் தொடர்ந்து கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, 24 “A” சாலையில் உள்ள குளத்தினை 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இக்குளக்கரை பகுதியில் சுற்றுச்சுவர், நடைபாதை, செயற்கை நீரூற்று, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், இறகு பந்து மைதானம், யோகா மேடை, இளைப்பாறும் கூடம் ஆகியவை அமைக்கப்படவுள்ளன.

பின்னர், அதே சாலையில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஹைட்ரஜன் சல்பைடு வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய சாலையோர உந்து நிலையத்தின் செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த உந்து நிலையத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள 34 தெருக்களைச் சேர்ந்த சுமார் 10,000 மக்கள் பயன்பெறுகின்றனர்.

**பெரம்பூர் சுரங்கப் பாதையில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடன் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு!**

பெரம்பூர் சுரங்கத் பாதையில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தென்னக இரயில்வே, காவல் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் உயர் அலுவலர்களுடன் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

பெரம்பூர் சுரங்கப்பாதையில் கடந்த சில வருடங்களாக அதிகனமழை காரணமாக மழைநீர் தேக்கம் அதிமாக உள்ளது. தற்போது நடைபெறும் இரயில்வே கட்டுமான பணிகளின் காரணமாக, ஏற்கனவே உள்ள கால்வாய் சேதமடைந்து, மழைநீர் ஏகாங்கிபுரம் கால்வாய்க்கு செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்போதுள்ள 10,000 லிட்டர் கொள்ளவுள்ள கீழ்நிலைத் தொட்டி 60,000 லிட்டர் கொள்ளவுள்ள தொட்டியாக மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், 60 Hp மின் மோட்டார் இணைப்புடன் கூடுதலாக இரண்டு குழாய்கள் பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கு பகுதியில் ஏகாங்கிபுரம் கால்வாயில் செல்லுமாறும், ஒரு குழாய் பெரம்பூர் நெடுஞ்சாலை வடக்கு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் செல்லுமாறும் அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

இந்த ஆய்வின்போது, மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு நிரந்தர தீர்வாக, புதிய மழைநீர் வடிகால்வாய் பெரம்பூர் நெடுஞ்சாலை வடக்கில் சிறு வள்ளூர் சாலை முதல் ஏகாங்கிபுரம் கால்வாய் வரை 280 மீட்டர் நீளத்திற்கும், பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கு பகுதியில் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கும் ஒரு மழைநீர் வடிகால்வாய் அமைப்பதுடன் பெரம்பூர் இரயில்வே நிலையத்தில் இருப்பு பாதைகளின் கீழ் புதிதாக ஒரு மழைநீர் கால்வாய் அமைத்திட நடவடிக்கை எடுப்பது குறித்தும், இப்புதிய கால்வாயினை ஏற்கனவே அமைந்துள்ள இரயில்வே கால்வாயின் அருகிலேயே உள்ள தடத்தில் அமைத்தால் பெரு வெள்ளக் காலங்களில் ஏற்படும் இடர்பாடுகளை களைய இயலும் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும், இப்பகுதியில் உள்ள உயர்மட்ட பாலத்தில் கனரக வாகனங்கள் செல்லவும், சுரங்கப் பாதையில் இரண்டு சக்கர வாகனங்கள், ஆட்டோக்கள் செல்லவும் அனுமதித்து, இப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

**அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களையும், கலைஞர் இலவச கண் மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்றவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளையும் வழங்குதல்!**

முன்னதாக, கொளத்தூர் பெரியார் நகர் 4வது தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் தையல் பயிற்சி முடித்த 350 மகளிருக்கு சான்றிதழ்கள் மற்றும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களையும், Tally பயிற்சி முடித்த 107 மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் மடிக்கணினிகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும், கலைஞர் இலவச கண் மருத்துவ மையத்தில் சிகிச்சை பெற்ற 2,493 நபர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மூக்கு கண்ணாடிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் நா. சுப்பையன், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி ஹெலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.